**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஈரோடு**

முன்னிலை : திரு.R.வா ஞ்சிநாதன்., B.A.,B.L.,(Hons).,L.L.M ., P.G.D in J.J & J.P

நீதித்துறை நடுவர் எண்.1, ஈரோடு

2026–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06–ம் நாள் வியாழக்கிழமை

(2057 திருவள்ளுவராண்டு, பராபவ வருடம், ஆடி மாதம் 21–ம் நாள்)

**CNR.No.TNED040043602025**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.542/2025**

அரசுக்காக,
காவல் ஆய்வாளர்,
ஈரோடு தாலூக்கா காவல் நிலையம், ஈரோடு,
குற்ற எண்.33/2025 ... குற்றமுறையீட்டாளர்

/ எதிர்/

பிரபுதேவா (வயது 33/2026),
த/பெ. சண்முகம்,
10–சாஸ்திரி நகர் 3 வது வீதி,
லட்சுமி நகர், காசிபாளையம்,
ஈரோடு. ... குற்றஞ்சாட்டப்பட்டவர்

| வரிசை எண் | விளக்கம் | விவரங்கள் | |
|---|---|---|---|
| 1. | சம்பவம் நடந்த நாள் | 28.01.2025 | |
| 2. | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள் | 29.01.2025 | |
| 3. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள் | கைது செய்யப் பட்ட நாள் | பிணையில் சென்ற நாள் |
| | | 11.03.2025 | 11.03.2025 – காவல்நிலைய பிணையில் சென்றுள்ளார். |
| 4. | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 01.07.2025 | |
| 5. | குற்றச்சாட்டு வனையப்பட்டு குற்றச்சாட்டு குறித்து வினவப்பட்ட நாள் | 16.06.2026 | |



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.08.06 16:40:11 +0530

<table>
<tr><td>6.</td><td>BNSS பிரிவு 355–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விபரம் மற்றும் அதன் முடிவுகள்</td><td colspan="3">அரசு தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 311–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட M.P.No.1/2026–ல் மனு கடந்த 01.08.2026–ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td rowspan="5">7.</td><td rowspan="5">வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td>சாட்சிகள்</td><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr>
<tr><td>அ.சா.1</td><td>02.07.2026</td><td>02.07.2026</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>13.07.2026</td><td>இல்லை</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>13.07.2026</td><td>13.07.2026</td></tr>
<tr><td>அ.சா.4</td><td>01.08.2026</td><td>01.08.2026</td></tr>
<tr><td>8.</td><td>எதிரியிடம் குற்றம் குறித்து BNSS பிரிவு 351(1)(பி)–ன் கீழ் வினவிய நாள்</td><td colspan="3">04.08.2026</td></tr>
<tr><td rowspan="2">9.</td><td rowspan="2">எதிரி மீது பிடியாணை வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள்</td><td>பிடியாணை வழங்கப்பட்ட நாள்</td><td colspan="2">பிடியாணை திரும்ப பெறப்பட்ட நாள்</td></tr>
<tr><td>--</td><td colspan="2">--</td></tr>
<tr><td>10.</td><td>வழக்கு தீர்ப்புக்காக ஒத்தி வைக்கப்பட்ட நாள்</td><td colspan="3">04.08.2026</td></tr>
<tr><td>11.</td><td>தீர்ப்பு பகரப்பட்ட நாள்</td><td colspan="3">06.08.2026</td></tr>
</table>

இவ்வழக்கானது கடந்த 24.07.2025–ம் தேதி, C.C.No.542/2025 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டும், எதிரிக்கு எதிராக அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை 2 திருமதி.N.அனிதா அவர்கள் ஆஜராகியும், குற்றஞ்சாட்டப்பட்ட எதிரி தரப்பில் வழக்குரைஞர் திரு.P.S.கௌரிசங்கர் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பும் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும் இதுநாள் வரை பரிசீலனையிலிருந்து வந்து இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கும்,

–<u>தீர்ப்புரை</u>–

இந்த வழக்கு BNSS 193(2) இன் படி தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதி அறிக்கையின் அடிப்படையில் எழுந்த வழக்காகும்.



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.08.06 16:40:17 +0530

**1. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :**

கடந்த 28.01.2025–ம் தேதி, இரவு 19.40 மணிக்கு, ஈரோடு ஆணைக்கல்பாளையம் – முத்துக்கவுண்டன்பாளையம் ரிங்ரோடு ஆணைக்கல்பாளையம் டாஸ்மாக் கடை அருகில் ரோட்டின் ஓரமாக இவ்வழக்கில் இறந்துபோன மாது என்பவர் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி நடந்து சென்றபோது, அதே ரோட்டில் அதே திசையாக மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி TN 33 BZ 6768 என்ற பதிவு எண் உள்ள E பைக் CHETAK இருசக்கர வாகனத்தை எதிரி பிரபுதேவா என்பவர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து மாது என்பவர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியும், அதில் மாது என்பவருக்கு தலை மற்றும் இடுப்பில் காயங்கள் ஏற்பட்டதினால், மருத்துவமனையில் தொடர் சிகிச்சையில் இருந்து வந்தவர் 06.03.2025–ம் தேதி, காலை 05.00 மணிக்கு இறந்துள்ளார். எனவே மாது என்பவருக்கு சாலை விபத்தை ஏற்படுத்தி இறப்பை ஏற்படுத்திய குற்றத்திற்காக எதிரி மீது சட்டப்பிரிவுகள் 281, 106 BNS–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்கள் புரிந்துள்ளதாக ஈரோடு தாலூக்கா காவல் நிலைய காவல் ஆய்வாளரால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. குற்ற இறுதி அறிக்கை மற்றும் சாட்சிகளின் வாக்குமூலங்களையும் குற்ற அறிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களையும் பரிசீலனை செய்து பார்த்ததில், எதிரிக்கு எதிராக புலன் கொள்ளக்கூடிய குற்றங்கள் விசாரணைக்கு எடுக்க முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால், எதிரிக்கு எதிராக சட்டப்பிரிவுகள் 281, 106 BNS–ன் படியான குற்றத்தை விசாரணைக்கு எடுத்து BNSS 210 (1) (b)–ன் படி உத்தரவிடப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3. குற்றஞ்சாட்டப்பட்டவர் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன், குற்றஞ்சாட்டப்பட்டவர்க்கு வழக்கில் உள்ள ஆவணங்களின் நகல்கள் யாவும் பிரிவு 230 BNSS–ன் படி இலவசமாக வழங்கப்பட்டன.



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.08.06 16:40:22 +0530

4. போதிய அவகாசம் கொடுக்கப்பட்டு எதிரியிடம் அரசுதரப்பில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்துள்ளார். ஆவணங்களை ஆராய்ந்ததன் அடிப்படையில் எதிரி இந்நீதிமன்றம் விசாரிக்கக்கூடிய குற்றச்செயலில் ஈடுபட்டுள்ளார் என அனுமானம் செய்ய போதிய காரணங்கள் இருந்ததால், BNSS பிரிவு 263(1)–ன் படி எதிரி மீது சட்டப்பிரிவுகள் 281, 106 BNS–ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து வாசித்து விளக்கிக் கூறி வினவியபோது குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்றச் சாட்டினை மறுத்த காரணத்தினால் BNSS பிரிவு 265–ன் படி அரசு தரப்பில் சாட்சிகளை விசாரிக்க உத்தரவிடப்பட்டது.

5. அரசு தரப்பில் பட்டியலிடப்பட்ட 16 சாட்சிகளில், 4 சாட்சிகள் அ.சா.1 முதல் அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>அரசு தரப்பு சாட்சிகளிலிருந்து தெரியவரும் அரசுதரப்பு வழக்கின் சுருக்கம்:</u>

6. கடந்த 29.01.2025–ம் தேதி, காலை 10.00 மணிக்கு, அ.சா.1 திருமதி.முத்தம்மாள் நிலையம் ஆஜராகி கொடுத்த அ.சா.ஆ.3 புகாரினை சிறப்பு உதவி ஆய்வாளர் சாட்சி–14 திரு.சிவக்குமார் பெற்று நிலைய குற்ற எண்.33/2025, சட்டப்பிரிவுகள் 281, 125 (a) BNS–ன் கீழ் அ.சா.ஆ.4 முதல்தகவல் அறிக்கை பதிவு செய்து, முதல் தகவல் அறிக்கை அசலுடன் அ.சா.1–ன் எழுத்து மூலமான புகாரினையும் இணைத்து கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 ஈரோடு அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட காவல் துறை அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

(ii) பின்னர் உதவி ஆய்வாளர் சாட்சி–15 திரு.மாதேஸ்வரன் வழக்கை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றை தினமே பகல் 11.00 மணிக்கு சம்பவம் இடம் சென்று சம்பவ இட சாட்சிகள் சாட்சி–7 திரு.கனகராஜ் மற்றும் சாட்சி–8 திரு.தாமரைசெல்வம் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.2 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம் தயார் செய்தும், வழக்கு சாட்சிகள் அ.சா.1 திருமதி.முத்தம்மாள், அ.சா.2 திரு.செல்வராஜ், சாட்சி–3



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.08.06 16:40:28 +0530

திரு.பரணிதரன், சாட்சி–4 திரு.முருகேசன் த/பெ பெரியசாமி, சாட்சி–5 திரு.முருகேசன் த/பெ. பொன்னுசாமி, சாட்சி–6 திருமதி.சித்ரா, சாட்சி–7 திரு.கனகராஜ், சாட்சி–8 திரு.தாமரைசெல்வம் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தும், மேற்படி சாட்சியத்திலிருந்து சம்பவம் உண்மை என தெரியவந்ததால் கைது செய்வதற்காக காரணத்தை கூறி எதிரியை கைது செய்து தக்க பிணையம் பெற்று காவல் நிலைய பிணையில் விடுவித்தும், எதிரியின் வாகனத்தை விபத்து குறித்த ஆய்வுக்காக மோட்டார் வாகன ஆய்வாளருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பிவைத்துள்ளார்.

(iii) பின்னர் இவ்வழக்கின் புலன் விசாரணையை காவல் ஆய்வாளர் சாட்சி–16 திரு.சரவணன் அவர்கள் எடுத்துக்கொண்டு புகார்தாரர் அ.சா.1 திருமதி.முத்தம்மாள் என்பவரை விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்தும், இவ்வழக்கு சாட்சிகள் அ.சா.2 திரு.செல்வராஜ், சாட்சி–3 திரு.பரணிதரன், சாட்சி–4 திரு.முருகேசன், சாட்சி–5 திரு.முருகேசன் மற்றும் சாட்சி–6 திருமதி.சித்ரா ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்தும், மோட்டார் வாகன ஆய்வாளர் சாட்சி–9 திரு.சிவக்குமார் என்பவரை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்து எதிரி ஓட்டிச் சென்ற TN 33 BZ 6768 Chetak–K என்ற பதிவெண் கொண்ட வாகனத்திற்கான மோட்டார் வாகன ஆய்வறிக்கை – அ.சா.ஆ.6 பெற்றும், இறந்துபோன மாது என்பவருக்கு சிகிச்சை அளித்த சேலம் பிரீத்தம் மருத்துவமனை மருத்துவர் சாட்சி–11 திரு.அருள்ராஜமாணிக்கம் என்பவரை விசாரித்து அ.சா.ஆ.7 இன்டிமேஷன் மற்றும் அ.சா.ஆ.8 விபத்து பதிவேடு பெற்று, வாக்குமூலம் பதிவு செய்தும், பின்னர் தொடர் சிகிச்சையில் இருந்து வந்த மாது சிகிச்சை பலனின்றி 06.03.2025–ம் தேதி இறந்துவிட்டதால், பிரேதத்தை அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவமனைக்கு மருத்துவர் அனுப்பி வைத்தும், பின்னர் பிரேதத்தை பரிசோதனை செய்த மருத்துவர் சாட்சி–13 திரு.மாணிக்கவாசகம் என்பவரை விசாரித்து அ.சா.ஆ.9 பிரேத பரிசோதனை அறிக்கை பெற்று, வாக்குமூலம் பதிவு செய்தும், பின்னர் இவ்வழக்கின் மேல் விசாரணைக்கு காவல் ஆய்வாளர் சாட்சி–16 திரு.சரவணன் எடுத்துக் கொண்டு சிறப்பு



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.08.06 16:40:34 +0530

உதவி ஆய்வாளர் சாட்சி–14 திரு.சிவக்குமார் என்பவரையும், உதவி ஆய்வாளர் சாட்சி–15 திரு.மாதேஸ்வரன் என்பவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், பின்னர் இவ்வழக்கின் சட்டபிரிவை 281, 125(a) BNS லிருந்து 281, 106 BNS ஆக இவ்வழக்கின் சட்டபிரிவை மாற்றி அ.சா.ஆ.10 சட்டபிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தும், இறுதியாக அவரது புலன்விசாரணையை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவுகள் 281, 106 BNS–ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

7. அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக உள்ள பகுதியை விளக்கி BNSS 351 (1) (பி)–ன் கீழ் வினவ குற்றஞ்சாட்டப்பட்டவர் சாட்சிகளின் சாட்சியங்களை பொய் சாட்சி என்றும், எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என தெரிவித்துள்ளார். எனவே எதிரி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படாததால் எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது.

**இந்த வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை:–**

8. இவ்வழக்கில் அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள சட்டப்பிரிவுகள் 281, 106 BNS–ன் கீழான குற்றங்கள் எவ்வித ஐயப்பாட்டிற்கும் இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதே தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை ஆகும்.

**தீர்வு:–**

9. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. எதிரி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 மற்றும் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியான அ.சா.2 ஆகிய சாட்சிகள் பிறழ்சாட்சிகளாக பாவிக்கப்பட்டுள்ளார்கள் என்றும், மேலும் அரசுதரப்பு வழக்கை நிரூபணம் செய்யக்கூடிய வகையில் சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றும், எனவே அரசுதரப்பு வழக்கு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாத காரணத்தினால் எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.08.06 16:40:40 +0530

10. அரசுதரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்குரைஞர் தனது வாதத்தில் இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டுள்ளபோதும், இந்த வழக்கில் புலன்விசாரணை குறித்து அ.சா.4 அரசுதரப்பு வழக்கை ஒத்துரைத்து சாட்சியம் அளித்துள்ளதால் எதிரி மீதான குற்றங்கள் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும் வாதிட்டார்.

11. அ.சா.1 இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் என்பதும், அ.சா.2 சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சி என்பதும், அ.சா.3 பார்வை மகஜர் சாட்சி என்பதும், அ.சா.4 தற்போதைய ஈரோடு தாலூக்கா காவல்நிலைய காவல் ஆய்வாளர் என்பதும் அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலிக்கும் போது தெரியவருகிறது.

12. அ.சா.1 திருமதி.முத்தம்மாள் அவர்களின் அம்மாவுக்கு கடந்தொரு வருடமாக உடல் நிலை சரியில்லாமல் ஈரோடு GH–ல் மருத்து மாத்திரை வாங்கி சாப்பிட்டு வருகிறார் என்றும், 28.01.2025–ம் தேதி, காலை 11.00 மணியளவில், அ.சா.1–ன் அம்மா ஈரோடு GH சென்று வருவதாக சொல்லிவிட்டு சென்றதாகவும், பின்னர் இரவு 07.40 மணியளவில் ஆணைக்கல்பாளையம் நால்ரோடு to லக்காபுரம் நால்ரோட்டுக்கு செல்லும் ரிங்ரோட்டில் மேற்க்கிலிருந்து கிழக்கு நோக்கி அ.சா.1–ன் அம்மா ஆணைக்கல்பாளையம் டாஸ்மாக் கடை எதிரே ரோட்டில் இடது புறமாக நடந்து வந்து கொண்டிருந்தபோது அதே ரோட்டில், அதே திசையில் வந்த TN BZ 6768 என்ற E பைக் Chetak வண்டி ஓட்டுநர் பிரபுதேவா என்பவர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து அ.சா.1–ன் அம்மாவின் பின்னால் மோதியதில் அ.சா.1–ன் அம்மா தூக்கி வீசி கீழே விழுந்து விட்டதாகவும், உடனே அங்கிருந்த அ.சா.2 திரு.செல்வராஜ் என்பவர் அ.சா.1–க்கு போன் செய்து அம்மாவுக்கு அடிப்பட்டு விட்டதாகவும், அதில் அம்மாவுக்கு தலையில் பின்புறம் பலத்த ரத்தக்காயமும், இடுப்பில் பின் பக்கம் பலத்த அடிபட்டு விட்டதாகவும் தகவல் சொன்னதாகவும், உடனே அ.சா.1–ன் மகன் பரணிதரனை அனுப்பி தனியார் ஆம்புலன்ஸ் மூலம் ஈரோடு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும், அ.சா.1–ன் அம்மாவுக்கு விபத்து ஏற்படுத்திய TN 33 BZ 6768



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.08.06 16:40:45 +0530

என்ற வண்டி ஓட்டுநர் பிரபுதேவா மீது நடவடிக்கை எடுக்குமாறு அ.சா.1 திருமதி.முத்தம்மாள் அ.சா.ஆ.3–ன் படி புகார் அளித்ததன் அடிப்படையில் எதிரி மீது அ.சா.ஆ.4–ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது.

13. மேற்படி வழக்கு சம்பவம் குறித்து இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 திருமதி.முத்தம்மாள் தன்னுடைய முதல் விசாரணையில் கடந்த 28.01.2025–ம் தேதி, இரவு 7.40 மணியளவில், ஆணைக்கல்பாளயைம் 4 ரோடு செல்லும் ரிங் ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி டாஸ்மாக் அருகில் இடது ஓரமாக தனது அம்மா நடந்து வந்து கொண்டிருந்தபோது, அதே ரோட்டில் அதே திசையில் அவருக்கு பின்னால் ஒரு வாகனம் வந்து மோதியதில் தனது அம்மாவிற்கு தலை, இடுப்பு ஆகிய இடங்களில் பலத்த காயம் ஏற்பட்டதாக அ.சா.2 திரு.செல்வராஜ் என்பவர் தனக்கு போன் மூலம் தகவல் தெரிவித்தார் என்றும், அவரை தான் தனியார் ஆம்புலன்சு மூலம் ஈரோடு அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சையில் சேர்த்ததாகவும், தான் இது சம்மந்தமாக காவல் நிலையம் சென்றபோது போலீசார் தன்னிடம் கையொப்பம் கேட்டார்கள் என்றும், தான் கையொப்பம் செய்ததாகவும், புகாரிலுள்ள கையெழுத்து – அ.சா.ஆ.1 தன்னுடையது தான் என்றும், அதில் உள்ள சங்கதிகளை போலீசார் எழுதிக்கொண்டார்கள் என்று கூறி அரசுதரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு, அரசுதரப்பால் குறுக்குவிசாரணை செய்யப்பட்டபோதும், எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிரூபணம் செய்யக்கூடிய வகையில் எவ்வித சாட்சியமும் பெறப்படாதது அரசுதரப்பு வழக்கில் சந்தேகத்தையும், பாதிப்பையும் ஏற்படுத்தியுள்ளது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

14. மேலும் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியான அ.சா.2 திரு.செல்வராஜ் தன்னுடைய சாட்சியத்தில் வழக்கில் இறந்து போன மாது என்பவரை தனக்கு தெரியும் என்றும், விபத்து ஏற்பட்டது குறித்து போன் மூலம் தகவல் தெரிவித்ததன் பேரில் தான் சம்பவம் இடம் சென்றதாகவும், எதிரியை தனக்கு தெரியாது என்றும், தான் எந்த



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.08.06 16:40:52 +0530

சம்பவத்தையும் நேரடியாக பார்க்கவில்லை என்றும், வழக்கு குறித்து தனக்கு எந்த விவரமும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்று கூறி அரசுதரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு, அரசுதரப்பால் குறுக்குவிசாரணை செய்யப்பட்டபோதும், எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிரூபணம் செய்யக்கூடிய வகையில் எவ்வித சாட்சியமும் பெறப்படாதது அரசுதரப்பு வழக்கில் மேலும் சந்தேகத்தையும், பாதிப்பையும் ஏற்படுத்தியுள்ளது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

15. பார்வை மகஜர் சாட்சியான அ.சா.3 திரு.கனகராஜ் தன்னுடைய முதல் விசாரணையில் தன்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ.2 பார்வை மகஜரிலுள்ள முதலாவது கையெழுத்து தன்னுடையது தான் என்றும், தேதி, மாதம், வருடம் நியாபகம் இல்லை என்றும், கடந்த 3 வருடங்களுக்கு முன்பாக இரவு 08.00 மணியளவில் ஆணைக்கல்பாளையம் டாஸ்மார்க் அருகே தான் வந்து கொண்டிருந்த போது விபத்து ஏற்பட்டது சம்மந்தமாக போலீசார் விசாரணை செய்து படம் வரைந்து தன்னிடம் கையொப்பம் பெற்றனர் என்றும், வழக்கு குறித்து வேறு எந்த விவரமும் தனக்கு தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். இந்நிலையில் அ.சா.3 தன்னுடைய குறுக்குவிசாரணையில் *'போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ஆமாம்."* என்று சாட்சியம் அளித்துள்ளார். மற்றொரு பார்வை மகஜர் சாட்சியான சாட்சி–8 திரு.தாமரைச்செல்வம் அரசுதரப்பில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. மேலும் அ.சா.3–ன் சாட்சியத்தை பரிசீலித்து பார்க்கும்போது உண்மையில் போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று மேற்படி சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்களா என்பதே சந்தேகத்திற்கு உரிய சங்கதியாக உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

16. மேற்படி இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1, சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 ஆகிய சாட்சிகள் சம்பவ சமயத்தில் எதிரி



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.08.06 16:40:57 +0530

கவனக்குறைவாக TN 33 BZ 6768 என்ற பதிவு எண் உள்ள E பைக் CHETAK இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தினார் என குறிப்பிட்டு தெளிவாக சாட்சியம் அளிக்காமல் பிறழ்சாட்சியாக மாறியுள்ள நிலையிலும், மற்ற சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படாத நிலையிலும், தற்போது எஞ்சி இருப்பது இந்த வழக்கின் புலன் ஆய்வு அலுவலருக்கு பதிலாக சாட்சியம் அளித்த தற்போதைய ஈரோடு தாலூக்கா காவல்நிலைய காவல் ஆய்வாளரான அ.சா.4–ன் சாட்சியம் மட்டுமே ஆகும். அ.சா.4 மூலமாக அ.சா.ஆ.3 முதல் அ.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கு சம்பவத்தின்போது எதிரி தான் TN 33 BZ 6768 என்ற பதிவு எண் உள்ள E பைக் CHETAK இருசக்கர வாகனத்தை இயக்கினார் என்பதை தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலம் அரசுதரப்பு நிரூபணம் செய்யவில்லை. மேலும் சம்பவத்தன்று எதிரி மேற்படி TN 33 BZ 6768 என்ற பதிவு எண் உள்ள E பைக் CHETAK இருசக்கர வாகனத்தை அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி மேற்படி விபத்தை ஏற்படுத்தினார் என்பதையும், அதன்காரணமாக மாதுக்கு இறப்பு ஏற்பட்டுள்ளது என்பதையும் அரசுதரப்பு தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்ய தவறிவிட்டது. அ.சா.1 திருமதி.முத்தம்மாள் அளித்த அ.சா.ஆ.3 புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்து புலன் விசாரணை மேற்கொண்டு எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்து அ.சா.4–ன் சாட்சியம் அமைந்துள்ளதேயன்றி எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகளை ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யக்கூடிய வகையில் அவரது சாட்சியம் அமைந்திருக்கவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே அ.சா.4–ன் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுவிட்டதாக முடிவுக்கு வர இயலாது என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

17. இறுதியாக, மேலே ஆராய்ந்த வகையில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டானது அரசுதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் வாயிலாக ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என தீர்மானித்து, மேலே



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.08.06 16:41:03 +0530

ஆராய்ந்த காரணங்களின் அடிப்படையில் எழுந்துள்ள சந்தேகங்களின் பலனை எதிரிக்கு வழங்கி, எதிரி மீதான சட்டப்பிரிவுகள் 281, 106 BNS–ன் கீழான குற்றச்சாட்டை பொறுத்து எதிரி குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, மேற்கண்ட குற்றச்சாட்டுகளிலிருந்து BNSS பிரிவு 271(1)–ன் படி எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

18. வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் எதிரி பிணையில் இருந்ததால் எதிரியும், பிணையதாரர்களும் சேர்ந்து எழுதிக்கொடுத்த பிணைப்பத்திரம் ரத்து செய்யப்படுகின்றது.

19. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்பதால் அது குறித்து உத்தரவு ஏதுமில்லை.

இந்த தீர்ப்புரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, மீண்டும் என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06–ம் நாளான இன்று என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.08.06 16:41:09 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
ஈரோடு

**இணைப்பு**
**அரசு தரப்பு சாட்சிகள் :**

| வரிசை எண். | அரசுதரப்பு சாட்சி எண். | பெயர் | விவரிப்பு |
|---|---|---|---|
| 1. | அ.சா.1 | திருமதி.முத்தம்மாள் | நிகழ்நிலை புகார்தாரர் |
| 2. | அ.சா.2 | திரு.செல்வராஜ் | சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சி |
| 3. | அ.சா.3 | திரு.கனகராஜ் | பார்வை மகஜர் சாட்சி |
| 4. | அ.சா.4 | திரு.தமிழ்முரசு | விசாரணை அதிகாரி |

<u>அரசு தரப்பு சான்றாவணங்கள் :</u>

| வரிசை எண். | அரசு தரப்பு சான்றாவணம் எண். | குறியீடு செய்யப்பட்ட தேதி | குறியீடு செய்யப்பட்ட ஆவணம் | யாரால் சான்றாவணம் நிரூபிக்கப்பட்டது/ சான்றொப்பம் இடப்பட்டது |
|---|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | 02.07.2026 | புகாரிலுள்ள அ.சா.1–ன் கையெழுத்து | அ.சா.1 |
| 2. | அ.சா.ஆ.2 | 13.07.2026 | பார்வை மகஜர் | அ.சா.3 |
| 3. | அ.சா.ஆ.3 | 01.08.2026 | புகார் | அ.சா.4 |
| 4. | அ.சா.ஆ.4 | 01.08.2026 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.4 |
| 5. | அ.சா.ஆ.5 | 01.08.2026 | மாதிரி வரைபடம் | அ.சா.4 |
| 6. | அ.சா.ஆ.6 | 01.08.2026 | TN 33 BZ 6768 Chetak–K என்ற பதிவெண் கொண்ட வாகனத்திற்கான மோட்டார் வாகன ஆய்வறிக்கை | அ.சா.4 |
| 7. | அ.சா.ஆ.7 | 01.08.2026 | சேலம் பிரீத்தம் மருத்துவமனை விபத்து இன்டிமேஷன் | அ.சா.4 |
| 8. | அ.சா.ஆ.8 | 01.08.2026 | விபத்து பதிவேடு | அ.சா.4 |
| 9. | அ.சா.ஆ.9 | 01.08.2026 | பிரேத பரிசோதனை அறிக்கை | அ.சா.4 |
| 10. | அ.சா.ஆ.10 | 01.08.2026 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை | அ.சா.4 |

**எதிரி தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் : ஏதுமில்லை.**

**அரசு தரப்புச் சான்று பொருள் : ஏதுமில்லை.**

<u>குறிப்பு</u> :

1. எதிரி பிணையில் உள்ளார்.
2. சாட்சிகள் யாரும் 3 வாய்தாக்களுக்கு மேல் அழைக்கப்படவில்லை.
3. தீர்ப்புரை குறித்து காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.08.06 16:41:15 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
ஈரோடு